# தினசரி சந்தை நிலவரம் - கோவை மாவட்டம் ரொட்டிக் கவுண்டனூர்



**ரங்கசாமி**

ரொட்டிக் கவுண்டனூர்

கோவை மாவட்டம்

செல்: 9629705335

எனது பெயர் ரங்கசாமி. நான் கோவை மாவட்டம் ரொட்டிக் கவுண்டனூர் என்ற ஊரில் ஒரு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். நான் என்னுடைய நிலத்தில் இப்பொழுது தக்காளி பயிரிட்டு வருகின்றேன். அதை கோயம்புத்தூர் M.G.R. காய்கறிகள் சந்தையில் விற்று வருகிறேன். அதனுடைய லாபம் போதுமானதாக இல்லை என்றாலும் வேறு வழியில்லை என்ற நிலையில் விற்பனை செய்து வந்தேன். நான் தக்காளி தவிர கத்தரிக்காய், வெண்டை போன்ற காய்கறிகளையும் சூழ்நிலைக்கேற்றவாறு பயிரிடுவேன். எல்லாவற்றிலுமே எனக்குக் குறைந்த லாபமே கிடைத்து வந்தது.

அப்பொழுதுதான் என்னை கோவை M.G.R. காய்கறிகள் சந்தையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கோயம்புத்தூர் சந்தை ஆய்வாளர் R. செல்லப்பாண்டியனை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் என்னை சந்தித்து வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழற்கும் தினசரி சந்தை நிலவரத்தினைப் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் கைபேசியில் தினசரி விலை நிலவரங்களை குறுந்தகவல்கள் மூலம் இலவசமாக அனுப்புவதாகவும் கூறினார். மேலும் அதனுடைய பயன்களையும் அதனால் ஏற்கனவே நிறைய விவசாயிக் பயனடைந்து வருவதாகவும் எனக்கு எடுத்துக் கூறினார்.

அதனால் நான் என்னுடைய கைபேசி எண்ணை அவரிடம் அளித்து அப்பொழுது தக்காளி பயிரிட்டு வந்த காரணத்தால் தக்காளியின் கோயம்புத்தூர் மற்றும் மேட்டுப்பாளையம் சந்தைகளின் விலை நிலவரத்தினை அனுப்புமாறு கூறினேன். அவரும் என்னுடைய எண்ணைப் பதிவு செய்து கொண்டார். அதன் அடுத்த நாளில் இருந்து எனக்குத் தகவல்கள் வர ஆரம்பித்தன. முதல் விவசாயத்தின் மீதே சிறிது சிறிதாக வெறுப்படைந்து வந்த நான் அதன் பிறகு பல்கலைக்கழகம் அனுப்பும் குறுந்தகவல்கள் மூலம் என்னுடைய விளை பொருட்களின் உண்மை விலைகளின் நிலவரத்தினை அறிந்து கொண்டு வியாபாரிகளிடம் அவர்களின் விலைக்குக் கட்டுப்படாமல் சுதந்திரமாக விலையை முடிவு செய்து விற்று லாபமடைந்து வருகிறேன். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

நான் அதிகம் படிக்காத காரணத்தால் என்னால் தாங்கள் அனுப்பும் தகவல்களை நானே படித்து

அறிந்து கொள்ள முடியவில்லை. பிறரிடம் கொடுத்து படிக்கச் சொல்லி நிலவரத்தினை அறிந்து பயன் அடைந்து வருகின்றேன். ஆகையால் தாங்கள் அனுப்பும் தகவல்கள் என்னைப் போன்ற விவசாயிகளும் தாங்களே படித்து அறிந்து கொள்ள வசதியாக தமிழில் அனுப்பினால் நாங்கள் இன்னும் பயனடைவோம் என்பதையும் வேண்டி தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தாங்கள் அனுப்பும் தகவல்களினால் ஒரு காய்கறியின் விலை நிலவரத்தை மட்டுமே அறிந்து கொள்ள முடிகிறது. நாங்கள் நான்கைந்து காய்கறிகள் பயிரிடுவதால் காய்கறிகளின் எண்ணை அதிகரித்து தகவல்களை அனுப்பினால் நாங்கள் மேலும் பயனடைவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைபேசி மூலம் தகவல்களை அனுப்பி விவசாயத்தில் வெறுப்படைந்திருந்த என்னைப் போன்ற பல விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளி ஏற்றித் தந்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் அதனுடைய அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நான் கூறிய வேண்டுகோளையும் பரிசீலிக்கும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.